# ஆம்பூர் நகராட்சி

2019-ம் வருடம் டிசம்பர் மாதம் 27-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகளின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.த.சௌந்தரராஜன்.பி.ஏ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

1. இந் நகராட்சிக்கு 2018-19-ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியான தார்வழி மற்றும் பெத்லகேம் பகுதயில் உள்ள நகராட்சி உரகிடங்குகளில் சேகரிக்கப்பட்டுள்ள மரபுவழிக் கழிவுகளை தாதுப்பொருட்களாக (Bio Mining) மாற்றம் செய்தல் பணியினை மேற்க்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண்.36 நாள்.22.02.2019-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில், மேற்படி பணிக்கு 14.11.2019ல் இரு உறை முறையில் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப தகுதியினை ஆய்வு செய்யப்பபட்டதில் இரண்டு தொழில் நுட்ப ஒப்பந்தங்கள் மட்டுமே தகுதி அடைந்துள்ளது. தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை விவர ஒப்பந்தப் புள்ளிகளை (PRICE BID) 23.12.2019- ம் தேதி அன்று திறப்பு செய்யப்பட்டது. தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப் புள்ளி தொகை (ருபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | இந் நகராட்சிக்கு சொந்தமான தார்வழி மற்றும் பெத்லகேம் பகுதி உரகிடங்குகளில் சேகரிக்கப்பட்டுள்ள மரபுவழிக்கழிவுகளைதாதுப்பொருட்களாக (Bio Mining) மாற்றம் செய்தல். | 750.00 | 1. Harsitha Associates, 22/23,Thambu Chetty Street, George Town, Parry Corner, Chennai.<br>2. Zigma Global Environ Solution Ltd, 24, Kalaimamagal Kalvi Nilaiyam Road, Erode.638001 | 1.10% மதிப்பீட்டை விட அதிகம்<br>3.76% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக உள்ளதால், குறைந்த விலைவிகிதம் (NEGOTIATION) வழங்குமாறு கூடுதலில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சென்னை,Harsitha Associates நிறுவனத்திற்கு, இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.230/2018/இ1, நாள்:23.12.2019 மூலம் தெரிவிக்கப்பட்டதில், தற்போது கட்டுமான பொருட்களின் விலை அதிகமாக உள்ளதாலும், போக்குவரத்து செலவுகள் அதிகமாக உள்ளதாலும், ஒப்பந்த விலை விகிதத்தை குறைத்து வழங்க இயலாத நிலை உள்ளது என சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் தனது 26.12.2019ம் தேதிய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதை பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அ. 2018-19-ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியான இந் நகராட்சிக்கு சொந்தமான தார்வழி மற்றும் பெத்லகேம் பகுதி உரகிடங்குகளில் சேகரிக்கப்பட்டுள்ள மரபுவழிக்கழிவுகளை தாதுப்பொருட்களாக (Bio Mining) மாற்றம் செய்தல் பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் மதிப்பீட்டிற்கு கூடுதலாக உள்ளது.மேற்படி பணி திட்டப் பணியாக இருப்பதாலும், அரசு நிர்ணயித்துள்ள கால கெடுவிற்குள் பணியினை முடிக்க வேண்டி இருப்பதாலும், அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் பக்கம்.9ல் 2.7.2ல் தெரிவித்துள்ள்வாறு, மதிப்பீட்டிற்கு 5 சதவீதம் வரை ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக இருந்தாலும், ஒப்புதல் வழங்கலாம் என குறிப்பிட்டுள்ள காரணத்தை கருத்தில் கொண்டு, மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு சென்னை,Harsitha Associates நிறுவனம் மதிப்பீட்டை விட கூடுதலில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதை அங்கீகரிக்கலாம்.
ஆ. மேற்படி திட்டத்தின் கீழ், ஒதுக்கீடு செய்யப்பட்ட மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்குத்தொகை போக நகராட்சி பங்கு தொகையை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.230/2018/இ1
தீர்மான எண்.84:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

2. இந் நகராட்சிக்குட்பட்ட தார்வழி பகுதியில் அமைந்துள்ள நகராட்சி உரகிடங்கில் உரம் தயாரிக்க உரகிடங்கு பகுதியில் அரமக்கப்பட்டுள்ள 1/3 கூரை வின்ரோசில் 14 எண்ணிக்கை உர தொட்டிகள் கட்டவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சதிதிற்கும் (ரூபாய்.ஒன்பது இலட்சத்து இம்பதாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அ.அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.1411/இ1/2019.
தீர்மான எண்.85:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரம் செய்யப்படும் குப்பைகளில் உள்ள அபாயகரமான கழிவுகளான டயாப்பர்கள் மற்றும் நாப்கின்கள் ஆகியவற்றை எரிக்க தேவைப்படும் Incinerator -ஐ சப்ளை செய்து நகராட்சி உரகிடங்கில் பொருத்துதல் பணிக்கு 20.12.2019-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தபுள்ளிதாரர் பெயர் (ம) விலாசம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|
| 1 | 6th Sense Innovations,<br>72/18, 2nd Floor,<br>Priyhivipakkam Main Road,<br>Ambattur,<br>Chennai.600 053. | 0.16% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2. | AT AYATEM,<br>5/32, Udhayasuriyan 2nd Street,<br>Sathurnagar,<br>Chennai.600 019 | 0.51% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலக்குறிப்பு:-அ.மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 6th Sense Innovations,சென்னை என்ற நிறுவனம் வழங்கியுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்கலாம்.

ஆ.அவசர அவசியம் கருதி மேற்படி Incinerator -ஐ சப்ளை செய்து நகராட்சி உரகிடங்கில் பொருத்துதல் பணியினை செய்து முடிக்க குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய சென்னை, 6th Sense Innovations நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.879/2019/இ1

தீர்மான எண்.86:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. இந்நகராட்சியின் 2019-20ஆம் ஆண்டு குடிநீர் கட்டண நிலுவை மற்றும் நடப்பு கேட்பு தொகையினை 31.03.2020-ஆம் தேதிக்குள் 100% வசூல் செய்யும் பொருட்டு நிலுவை மற்றும் நடப்பு தொகையினை செலுத்த கோரி பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் 25000 எண்ணிக்கை அச்சடித்து விநியோகம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ22,500/-க்கு அங்கீகாரம் கோரப்படுகின்றது. மேற்கண்ட வசூல் பணியின் அவசியத்தை கருதி, 23.12.2019-ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரு துண்டு பிரசுரம் 1000 எண்ணிக்கை அச்சடிக்க |
|---|---|---|
| 1 | எஸ். சரவணன்<br>கிங் ஆப்செட் பிரின்டர்ஸ், ஆம்பூர். | 900.00 |
| 2. | உமா ஆப்செட் & கிராபிக்ஸ்,<br>ஆம்பூர். | 950.00 |
| 3. | ஸ்ரீ சாரதா பிரிண்டர்ஸ்,<br>ஆம்பூர். | 1000.00 |

அலுவலக குறிப்பு:

1. மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை குடிநீர் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
2. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்றுள்ள குறைவான விலைப் புள்ளியினை வழங்கியுள்ள திரு. திரு.சரவணன், கிங் ஆப்செட் பிரின்டர்ஸ், என்பவரது விலைப் புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
3. மேற்கண்ட பணிகளின் அவசர அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளிகளின் கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்: 1429/2019/இ2

தீர்மான எண்.87:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 36 வார்டுகளில் பொது மக்கள், பள்ளி மாணவ,மாணவியர்கள் இடத்தில் டெங்கு காய்ச்சல்,திடக்கழிவு மேலாண்மை, குடிநீர் சிக்கனம், மழைநீர் சேகரிப்பு, சுகாதாரப் பணிகள் போன்ற தலைப்புகளில் கலைநிகழ்ச்சி மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு மேற்படி பணிக்கு 06.12.2019ம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் கிழ்கண்டவாறு பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் (ம) விலாசம் | நாள் 1 க்கு விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | சிவசக்தி கிராமிய கலைக்குழு,விருதாச்சலம், கடலூர் மாவட்டம் | ரு.15000/- |
| 2. | விஜய் கலைக்குழு,தருமபுரி மாவட்டம் | ரு.17000/- |
| 3. | அிஜய் கலைக்குழு,கிருஷ்ணகிரி மாவட்டம் | ரு.18000/- |

அலுவலக்குறிப்ப:-

(அ) சிவசக்தி கிராமிய கலைக்குழு வழங்கியுள்ள குறைந்த விைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

(ஆ)மேற்படி செலவினத்தொகையை SBM திட்டம் (4th SHPC)IEC தலைப்பிலிலிருந்து செலவு செய்யவும் அங்கீகாரம் வழங்கலாம்.

(இ) தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1317/2019/எச்1

தீர்மான எண்.88:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வாகன எண் TN 83 U 3474 டாடா ACE வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினத்திற்கு தீர்மான எண் 220 நாள் 06.03.2019 ல் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.மேற்படி பணிக்கு 25.11.2019 ம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் கீழகண்டவாறு பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | பநீபவானி ஆட்டோ கேரேஜ் லட்சுமி நகர் சான்றோர் குப்பம்,ஆம்பூர் | ரு.36,550/- |
| 2. | KSR டிங்கரிங் (ம) பேப்ரிக் ஒர்க்ஸ் , 4 ,பெதஸ்தா மருத்துவமனை, ஆம்பூர் | ரு.37700/- |

அலுவலக குறிப்பு:-

(அ). இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வாகன எண் TN 83 U 3474 டாடா ACE வாகனத்திற்கு தகுதி சான்று பெற மராமத்து பணி செய்யும் பொருட்டு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய பநீபவானி ஆட்டோ கேரேஜ்,லட்சுமி நகர் சான்றோர்குப்பம்,ஆம்பூர்.அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

(ஆ).அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய பநீபவானி ஆட்டோ கேரேஜ், லட்சுமி நகர் சான்றோர் குப்பம்,ஆம்பூர் என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கும் அங்கிகாரம் வழங்கலாம்.

ந.க.எண் 1186/2019/எச்1

தீர்மான எண்.89:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

7. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வாகன எண் TN 83 U 3479 டாடா ACE வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யவும் அதற்காகும் செலவினத்திற்கு தீர்மான எண் 220 நாள் 06.03.2019 ல் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 27.11.2019 ம் தேதியன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | பநீபவானி ஆட்டோ கேரேஜ்<br>லட்சுமி நகர் சான்றோர் குப்பம்,ஆம்பூர் | ரூ.39350/- |
| 2. | முனுசு டிங்கரிங் (ம) பேப்ரிக் ஒர்க்ஸ் ,4<br>,பெதஸ்தா மருத்துவமனை,ஆம்பூர் | ரூ.40750/- |

அலுவலக குறிப்பு:-

(அ). மேற்குறிப்பிட்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய பநீபவானி ஆட்டோ கேரேஜ்,லட்சுமி நகர் சான்றோர் குப்பம்,ஆம்பூர். அவர்களின் விலைப்புள்ளியை அங்கிகாரம் வழங்கலாம்.

(ஆ). அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய பநீபவானி ஆட்டோ கேரேஜ், லட்சுமி நகர் சான்றோர் குப்பம், ஆம்பூர் என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண் 001249/2019/எச்1

தீர்மான எண்.90:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

8. சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) 37–வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றம் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம் 2015–ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் ஆம்பூர் நகராட்சிக்கான சாலையோர வியபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 கீழ்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.

ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாலையோர வியாபாரிகள் வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டம் 2014 சம்மந்தமான நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் கடிதம் 733/2016/UPA2 நாள்.03.09.2018ல் தெரிவித்துள்ளவாறு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 அத்தியாயம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டும் மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுங்குப்படுத்தவும், ஆம்பூர் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 ஏற்படுத்தப்படுகின்றது.

## அத்தியாயம்–1

### முதனிலை

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.– இந்த துணை விதிகள் ஆம்பூர் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 என்றழைக்கப்படும்.

(2) இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்

2. பொருள் வரையறைகள்.– இந்த துணை விதிகளில், உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை,

(i) "சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) என்று பொருள்படும்.

(ii) "விற்பனை திட்டம்" என்பது சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைப்படம் என்று பொருள்படும்.

(iii) "விதிகள்" என்பது தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 என்று பொருள்படும்.

(iV) "திட்டம்" என்பது சட்டத்தின் 38வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015 என்று பொருள்படும்.

(V) "நகர விற்பனைக் குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக் குழு என்று பொருள்படும்.

சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும், வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

## அத்தியாயம்–2

3.விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள்:–

(1) பாத சாரிகளின் நடமாட்டம் (Foot fall) மற்றும் சாலையின் அகலம், வாகனம், மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டு விற்பனை மண்டலங்களை நகர விற்பனைக் குழு முடிவு செய்யும்.

(2) ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து ஆம்பூர் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிப்பார்க்கப்பட வேண்டும்.

(3) சாலையின் அகலத்தைக் கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரங்களைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுபடுத்தப்பட்ட விற்பனை மண்டலங்களை விவரிக்கப்பட வேண்டும்.

(i) இரு வழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில், நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனங்கள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(ii) 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால், சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iii) 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில், சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iV) 10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில், சாலையின் இரு புறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(V) ஒரு சாலையில் விற்பனைஅனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(Vi) சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.

(Vii) வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.

(Viii) சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4) சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலங்களில்,

(i) அரசு கட்டிடங்கள், உயர்நீதி மன்றம், பிற நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி / மாநகராட்சி / நகராட்சி அலுவலகங்கள், தீயணைப்பு நிலையங்கள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கும்,

(ii) இரயில் நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(iii) நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின் இரு பக்கங்களிலும் 30 மீட்டர் நீளத்திற்கும்,

(iV) பேருந்து நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(V) பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுகள் சட்டம், 2010ன்கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.

(Vi) மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்

(Vii) இரண்டு அல்லது அதிகமான சாலைகள் குறிப்பிட்ட இடங்களில் அனைத்து பக்கங்களில் 30 மீட்டர் நீளத்திற்கு

(Viii) எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேரும் வாயிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு.

(ix) பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்

(x) நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடங்களில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

குறிப்பு– கணக்கெடுப்பின்போது அறியப்பட்ட எந்தஒரு அங்காடியையோ அல்லது இயற்கையாக அமைய பெற்ற அங்காடியையோ, விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

**4.** சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு.– எந்த ஒரு விற்பனை மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்;

(i) வாகன போக்குவரத்து, மிதி வண்டி மற்றும் பாதசாரி நடமாற்றத்திற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(ii) கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iii) குடிநீர் வழங்கல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iV) சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள் , நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(V) ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது,

(Vi) நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது,

(Vii) நகர விற்பனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது,

(Viii) உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர, இதர இடங்களில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது.

(ix) விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது சேவைகளையோ அல்லது விற்பனையோ செய்யக்கூடாது.

(x) ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பெருக்கி உபகரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தக் கூடாது.

5. சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு,–

சாலையோ வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்,

(i) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்,

(ii) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மட்டும் விற்பனை செய்யப்படவேண்டும்,

(iii) விற்பனை செய்யும் இடத்தில் விற்பனை சான்றிதழ் காட்சிக்கு எப்பொழுதும் வைக்கப்பட வேண்டும்,

(iV) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும்போது இருக்க வேண்டும்.

(V) எப்பொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும், நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்,

(Vi) உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Vii) உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Viii) நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(ix) நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(x) தகுதியுடைய அலுவலர் கோரும்போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும், மற்றும்

(xi) இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

## அத்தியாயம்–3

## கட்டணங்கள், வரிகள் மற்றும் அபராதங்கள்

**6.** விற்பனை கட்டணம்,– **(1)** சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்.

**(2)** உப விதி **(1)**ன்படியான விற்பனை கட்டணம் கீழ்க்காணும் பட்டியலின்படியாகும்.

| வ. எண். | சாலையோர விற்பனையாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| 1. | நிலையான விற்பனையாளர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ.750/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள்வரை | வழிகாட்டி மதிப்பில் 2 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1500/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 3 சதவீதம் – வருடத்திற்கு ரூ.3500/–க்கு குறையாமல் |
| 2. | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 0.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ.375/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ.750/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 1.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1500/–க்கு குறையாமல் |
| 3. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1500/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.3000/– |
| 4. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.375/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.1500/– |
| 5. | நடமாடும் விற்பனையாளர் (தலைசுமை) | – | வருடத்திற்கு ரூ.250/– |

**(3)** மூன்று வருடங்களுக்கு ஒரு முறை விற்பனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

7. பராமரிப்பு கட்டணம்,– (1) சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின் தகுதியின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அங்காடி வகைகள் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்படும்.

(2) உப விதி (1)யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் மாதத்திற்கு ரூ.500/–க்கு குறையாமலும், ரூ.2500/–க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

(3) பராமரிப்பு கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 10% சதவீதம் உயர்த்தப்பட வேண்டும்.

(ஆம்பூர் நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளின்படி முடிவு செய்யப்பட வேண்டும்.)

8. அபராதம் விதித்தல்,– எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்,

(i) விற்பனை சான்றிதழ்படி, மாற்று இடத்திற்கு செல்ல அல்லது காலி செய்ய தவறும்பட்சத்தில், அல்லது

(ii) விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ, விற்பனை சான்று மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது,மாதாந்திர கட்டணத்தில் (மூன்று) மடங்காக அபராதம் செலுத்தப்பட வேண்டும்.

(2) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனைபாளர் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடைநீக்கம் செய்யப்படும். நான்காவது முறையாக விதிமுறைகளை மீறினால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

அத்தியாயம்– 4

பலவகை

9. விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுங்குமுறை படுத்துதல்.–

(1) நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலங்களில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு, வாகன நிறுத்தம், கனரக வாகனங்கள் இயக்கம் மற்றும் இது குறித்த இதர பொருள்கள் குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அங்கீகரிக்கப்படவில்லையெனில், அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக் குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

(2) விற்பனை மண்டலத்தில், விற்பனை பகுதி, நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றினை உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுபடுத்த வேண்டும்.

10. விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுங்குப்படுத்துதல்:–

எந்த ஒரு விற்பனையாளரும், தயார் செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954ல் குறிப்டப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில் மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்மந்தப்பட்ட அதிகாரி பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் மற்றும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவால் அந்த சாலையோர வியாபாரிகள் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.

11. விற்பனை மண்டலங்களில் குடிமை சேவைகளை ஒழுங்குப்படுத்துதல்:-

(1) விற்பனை மண்டலங்களில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்

(2) உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்.

(3) சாலையோர வியபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (Rechargeable lamps) அல்லது சுயமாக மின் உற்பத்தி செய்யும் சாதனங்கள் உபயோகப்படுத்தல் வேண்டும்.

(4) விற்பனை மண்டலங்களில் தனி நபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கக் கூடாது.

(5) மின்சார கம்பங்களிலிருந்து முறையற்ற மின் உபயோகத்தை தடுக்கப்படும்.

அலுவலக குறிப்பு:–

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றம் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018யை அங்கீகரித்து மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

1) மாவட்ட அரசிதழ் (ம) தினசரி நாளதிழில் வெளியீடு செய்திடவும் அதற்கான செலவினங்களை திட்ட நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்:2444/2015/எப்1)

தீர்மான எண்.91:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

9. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.33 சான்றோர்குப்பம் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பறையில் மிகவும் பழுதடைந்து இடிந்துவிழும் நிலையில் உள்ளது.மேற்படி பம்பு அறையை பொதுமக்களின் நலன் கருதி இடித்து அப்புறப்படுத்தவும், மேலும் மேற்படி சமுதாய கழிப்பறையின் சுற்றுச்சுவர் பழுதடைந்துள்ளதை பராமரிப்பு பணி செய்திடவும் அதற்காகும் மதிப்பீடு தொகை ரு.3.00 இலட்சத்திற்கும் (ருபாய் மூன்று இலட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1442/2019/இ1

தீர்மான எண்.92:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

10. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.எண்.2-ல் அகமதியா நகர் 2-வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலமும், ஜலால்பேட்டை 3-வது தெரு மற்றும் ஜலால்பேட்டை பிரதான சாலையில் சிறுபாலங்கள் இல்லாமையால் மழைகாலங்களில் தெருக்களில் மழைநீர் தேங்கி நிற்பதால் பொதுமக்கள் தொழுகைக்கு செல்ல இயலாத நிலை ஏற்படுவதுடன் போக்குவரத்திற்கும் பெறும் இடையூறு ஏற்படுகிறது.எனவே, அகமதியா நகர் 2-வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலமும், ஜலால்பேட்டை 3-வது தெரு மற்றும் ஜலால்பேட்டை பிரதான சாலையில் சிறுபாலங்கள அமைத்திடவும் அதற்காகும் தோராய மதிப்பீடு தொகை ரு.6.70 இலட்சத்திற்கும் (ருபாய் ஆறு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1442/2019/இ1

தீர்மான எண்.93:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

11. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.எண்.1-ல் மளிகை தோப்பு பகுதியில் இண்டர்நேஷனல் டேனரி சந்திப்பு மற்றும் குறுக்கு தெரு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் இல்லாமையால் மழைகாலங்களில் தெருக்களில் மழைநீர் தேங்கி நிற்பதால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் பெறும் இடையூறு ஏற்படுகிறது.எனவே,மேற்படி இடங்களில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கவும், அதற்காகும் தோராய மதிப்பீடு தொகை ரூ.9.30 இலட்சத்திற்கும் (ரூபாய் ஒன்பது இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.918/2019/இ1

தீர்மான எண்.94:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

12. இந் நனராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகள், தெருக்கள் மற்றும் முக்கிய பகுதிகள் குறித்து Global Information System (GIS) மூலம் GPS தொழில் நுட்பத்தில் சாலைகளின் வடிவரம், பொதுகழிப்பிடங்கள் ,MCC அமைவிடங்கள், சுடுகாடு, குப்பை தொட்டிகள், பூங்காக்கள் மற்றும் நீர்நிலைகள் ஆகிய விவரங்களுடன் நகர வரைபடம் தயார் செய்தல் பணிக்கான தோராய செலவினத் தொாகை ரூ.4.35 இலட்சதிற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிக்கு 20.110.2019-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ் வருமாறு பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரு.இலட்சத்தில்) | ஒப்பந்தாரர் பெயர் (திரு/திருமதி) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகள் தெருக்கள் மற்றும் முக்கிய பகுதிகள் குறித்து Global Information system (GIS)மூலம் GPS தொழில்நுட்பத்தில் சாலைகளின் விவரம் பொதுகழிபிபிடஙகள், MCC அமைவிடங்கள், சுடுகாடு,குப்பை தொட்டிகள், பூங்காக்கள் மற்றும் நீர்நிலைகள் ஆகிய விவரங்களுடன் நகர வரைபடம் தயார் செய்தல். | 4.35 | 1.HAGROIS,<br>5, M.P.A.Church Street,<br>S.S.Nagar Extension,<br>Thirumullaivoil.<br><br>2.GEOSCAN,<br>8, Gubert Nagar,<br>Govinnda Salai,<br>Puduchary. | 0.43% மதிப்பீட்டை விட அதிகம்<br><br>3.76% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:- அ.அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ஆ.மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் HAGROIS, Thirumullaivoil. என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

இ. மேற்படி பணியினை உடன் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று HAGROIS, Thirumullaivoil என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1131/2019/இ1

தீர்மான எண்.95:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

13. இந்நகராட்சியின் 2019-20ஆம் ஆண்டு சொத்து வரி, தொழில்வரி, வரியில்லா இனங்கள், மற்றும் தொழில் உரிம கட்டண நிலுவை மற்றும் நடப்பு கேட்பு தொகையினை 31.03.2020-ஆம் தேதிக்குள் 100% வசூல் செய்யும் பொருட்டு நிலுவை மற்றும் நடப்பு தொகையினை செலுத்த கோரி ஆட்டோவில் ஒலிபெருக்கி பொருத்தி பொதுமக்களுக்கு விளம்பரம் செய்யும் பணியினை 24-டிசம்பர்-2019 முதல் 31-மார்ச்-2020 வரை மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ **165000/-க்கு** அங்கீகாரம் கோரப்படுகின்றது. மேற்கண்ட வசூல் பணியின் அவசியத்தை கருதி, 23.12.2019-ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ (ஆட்டோ வாடகை, பேட்டரி, ஒலிபெருக்கி உட்பட) நாள் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | பி.மதுரை, த/பெ, பாலு,<br>பேபி காலணி, ஆம்பூர். | 1500.00 |
| 2. | வி. மணிகண்டன்,<br>த/பெ, வனராஜ்,<br>புதிய பேருந்து நிலையம், ஆம்பூர். | 1550.00 |
| 3. | முத்து, த/பெ, வனராஜ்,<br>புதிய பேருந்து நிலையம், ஆம்பூர். | 1600.00 |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
2. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்றுள்ள குறைவான விலைப் புள்ளியினை வழங்கியுள்ள திரு. பி.மதுரை, த/பெ, பாலு, என்பவரது விலைப் புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
3. மேற்கண்ட பணிகளின் அவசர அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளிகளின் கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்: 1244/அ1/ 2019**

தீர்மான எண்.96:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

14. இந்நகராட்சியின் 2019-20ஆம் ஆண்டு சொத்து வரி, தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்களின் நிலுவை மற்றும் நடப்பு கேட்பு தொகையினை 31.03.2020-ஆம் தேதிக்குள் 100% வசூல் செய்யும் பொருட்டு நிலுவை மற்றும் நடப்பு தொகையினை செலுத்த கோரி பொதுமக்கனுக்கு துண்டு பிரசுரங்கள் 75000 எண்ணிக்கை அச்சடித்து விநியோகம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ

70,000/-க்கு அங்கீகாரம் கோரப்படுகின்றது. மேற்கண்ட வசூல் பணியின் அவசியத்தை கருதி, 26.12.2019-ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ துண்டு பிரசுரம் 1000 எண்ணிக்கை அச்சடிக்க |
|---|---|---|
| 1 | எஸ். சரவணன்<br>கிங் ஆப்செட் பிரின்டர்ஸ், ஆம்பூர். | 900.00 |
| 2. | உமா ஆப்செட் & கிராபிக்ஸ்,<br>ஆம்பூர். | 950.00 |
| 3. | ஸ்ரீ சாரதா பிரிண்டர்ஸ்,<br>ஆம்பூர். | 1000.00 |

<u>அலுவலக குறிப்பு:</u>

1.மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

2.மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்றுள்ள குறைவான விலைப் புள்ளியினை வழங்கியுள்ள திரு. திரு.சரவணன், கிங் ஆப்செட் பிரின்டர்ஸ், என்பவரது விலைப் புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

3.மேற்கண்ட பணிகளின் அவசர அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளிகளின் கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்:** 1244/அ1/ 2019

தீர்மான எண்.97:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

15. இந்நகராட்சி அலுவலகத்திற்க்கு தேவையான கீழ்கண்ட பொருட்களை சப்ளை செய்தல் மற்றும் பொருத்துதல் பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ 2.90 இலட்சத்திற்க்கு அங்கிகாரம் கோரப்படுகின்றது.

| Sl. No | Description of Item | No of qty |
|---|---|---|
| 1 | Closed circuit Camera | 16 |
| 2 | Biometric attendance | 6 |
| 3 | 43" LED T.V. | 1 |
| 4 | Dry Powder Fire extinguisher | 10 |

அலுவலக பாதுகாப்பின் அவசியம் கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 22.10.2019-ஆம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| நிறுவனத்தின் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ |
|---|---|
| 1. ஜி.ஆர். சிஸ்டம்ஸ், எஸ்.கே.ரோடு, ஆம்பூர்<br>2. சிவா எலக்ட்ரானிக்ஸ், எஸ்.கே.ரோடு, ஆம்பூர் | ரூ 2,88,300/-<br>ரூ 291,000/- |

அலுவலகக்குறிப்பு:

1. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஜி.ஆர்.சிஸ்டம்ஸ், ஆம்பூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
2. அலுவலக பணியின் அவசர அவசியத்தை கருதி, மேற்படி பணிக்கு தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்.587/2018/இ2**

தீர்மான எண்.98:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

16. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் மண் சரிந்து உள்ளதாலும், நீர் வற்றிவிட்டதாலும், கீழ்க்கண்ட ஆழ்துளை கிணறுகள் இயக்க இயலாதநிலை உள்ளது. மேற்படி ஆழ்துளை கிணறுகளுக்கான மின்இணைப்பு பட்டியல் எழுப்பப்பட்டு வருகிறது.எனவே மேற்படி பயன்பாட்டில் இல்லாத மின்இணைப்புகளை துண்டிப்பு செய்ய மின்வாரியத்தினை கோர அங்கீகாரம் கோரப்படுகிறது. மின் இணைப்புகளின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | நகர்மின்பிரிவு |
|---|---|---|---|
| 1 | 14 | காசி செட்டி தெரு | 441-112-472 |
| 2 | 14 | கிருஷ்ணய்யர் தெரு | 441-122-456 |
| 3 | 15 | சுண்ணாம்புகாளை | 441-128-527 |
| 4 | 16 | பாங்கிகான் தெரு | 441-127-734 |
| 5 | 16 | சின்ன மசூதி தெரு | 441-128-638 |
| 6 | 16 | பாங்கி காதர் பாஷா தெரு | 441-127-747 |
| 7 | 17 | பழைய கங்கர்தக்கியா | 441-120-556 |
| 8 | 17 | புதிய கங்கர்தக்கியா | 441-120-1738 |
| 9 | 17 | பழைய வாணியம்பாடி ரோடு | 441-118-898 |
| 10 | 17 | காடி அப்துல் கபூர் தெரு | 441-127-744 |
| 11 | 17 | கிருஷ்ணாபுரம் விநாயகர் கோயில் தெரு | 441-120-639 |
| 12 | 18 | பெருமாள் கோயில் தெரு | 441-138-575 |
| 13 | 18 | ஓமந்தூர் ராமசாமி தெரு | 441-118-1660 |
| 14 | 18 | சொசைட்டி | 441-120-606 |
| 15 | 19 | காந்தி ரோடு ஜங்ஷன் | 441-135-485 |
| 16 | 19 | காந்தி ரோடு | 441-135-589 |
| 17 | 18 | கெங்கையம்மன் கோயில் தெரு | 441-120-622 |
| 18 | 18 | காந்தி ரோடு பள்ளி அருகில் | 441-120-609 |
| 19 | 20 | பட்டாணி மூசாமியான் தெரு | 441-131-615 |
| 20 | 20 | சந்தைப்பேட்டை மசூதி தெரு | 441-131-611 |
| 21 | 21 | நசுருதீன் கொல்லை தெரு | 441-132-1077 |
| 22 | 22 | நாட்டாம்கார சாய்பான்சா கொல்லை | 441-132-1034 |
| 23 | 23 | வாணக்கார கொல்லை 1வது தெரு | 441-130-1006 |
| 24 | 23 | வாணக்கார கொல்லை 2வது தெரு | 441-130-1027 |
| 25 | 23 | வாணக்கார கொல்லை 3வது தெரு | 441-130-1081 |
| 26 | 23 | ஜலால்பில்டிங் | 441-130-1035 |
| 27 | 24 | முகமதுபுரா மசூதி எதிர் தெரு | 441-130-1078 |
| 28 | 24 | நீலிக்கொல்லை மசூதி தெரு | 441-131-631 |

| | | | |
|---|---|---|---|
| 29 | 24 | பாங்கி பாபுன் கொல்லை தெரு | 441-131-610 |
| 30 | 34 | ஒத்தவாடை தெரு | 441-131-627 |
| 31 | 25 | முகமதுபுரா மசூதி 1வது சந்து | 441-113-829 |
| 32 | 25 | முகமதுபுரா மசூதி 1வது தெரு | 441-113-949 |
| 33 | 25 | முகமதுபுரா மசூதி 1வது தெரு 2வது சந்து | 441-113-947 |
| 34 | 25 | முகமதுபுரா மசூதி 1வது தெரு 3வது சந்து | 441-113-902 |
| 35 | 25 | முகமதுபுரா மசூதி 2வது தெரு | 441-113-880 |
| 36 | 26 | முகமதுபுரா மசூதி 1வது தெரு 3வது சந்து | 441-113-926 |
| 37 | 26 | முகமதுபுரா மசூதி 2வது தெரு 2வது சந்து | 441-113-927 |
| 38 | 26 | முகமதுபுரா மசூதி 2வது தெரு 3வது சந்து | 441-113-892 |
| 39 | 26 | முகமதுபுரா மசூதி 2வது தெரு சந்து | 441-113-948 |
| 40 | 26 | உம்மர் ரோடு 1வது சந்து | 441-114-459 |
| 41 | 26 | உம்மர் ரோடு 4வது சந்து | 441-112-1328 |
| 42 | 26 | உம்மர் ரோடு 5வது சந்து | 441-112-1365 |
| 43 | 27 | கட்டைமேடு | 441-113-358 |
| 44 | 35 | ராஜிவ்காந்தி தெரு | 441-123-678 |
| 45 | 35 | பணக்கார தெரு சந்து | 441-115-463 |
| 46 | 35 | குண்டாலம்மன் கோவில் தெரு | 441-123-708 |
| 47 | 36 | இந்திராநகர் | 441-123-583 |
| 48 | 36 | சௌராஷ்டிரபுரம் 2வது தெரு | 441-118-1094 |
| 49 | 36 | இந்திராநகர் 3வது தெரு | 441-124-604 |
| 50 | 36 | இந்திராநகர் 4வது தெரு | 441-124-605 |
| 51 | 36 | சாய்பாபா 2வது தெரு | 441-124-561 |
| 52 | 25 | இ.பி.லேன் | 441-112-798 |
| 53 | 10 | சலாவுதீன்நகர் | 441-132-965 |

| வ. எண் | வார்டு எண் | <u>தெருவின் பெயர்</u> | <u>மேற்கு மின்பிரிவு</u> |
|---|---|---|---|
| 1 | 1 | ஜட்ஜ்மனை | 442-103-1789 |
| 2 | 15 | குச்சகார யாகூப் தெரு | 442-101-1972 |
| 3 | 1 | இமாம்நகர் | 442-101-1173 |
| 4 | 1 | இமாம்நகர் 2வது தெரு | 442-101-1969 |
| 5 | 1 | இமாம்நகர் 3வது தெரு | 442-101-2078 |
| 6 | 1 | ரத்தினாநகர் | 442-101-2035 |
| 7 | 2 | ஜட்ஜ் மனை 2வது தெரு | 442-103-3424 |
| 8 | 2 | ஜலால் பேட் 2வது தெரு | 442-103-3628 |
| 9 | 2 | ஜலால் பேட் 2வது சந்து | 442-103-3381 |
| 10 | 2 | ஜலால் ரோடு 5வது தெரு | 442-101-1958 |
| 11 | 1 | ஜலால் ரோடு 7வது தெரு | 442-101-1996 |
| 12 | 1 | ஆஜாத் நகர் | 442-101-1891 |
| 13 | 1 | ரத்னா நகர் ஜங்ஷன் | 442-101-1892 |
| 14 | 2 | டி.அப்துல்ரசாக் தெரு சந்து | 442-103-3514 |
| 15 | 3 | கொணவட்டம் மொகிதீன் தெரு | 442-103-3515 |

| | | | |
|---|---|---|---|
| 16 | 3 | வாத்திமனை ஆட்டோ ஸ்டாண்ட் | 442-103-3224 |
| 17 | 3 | தொப்ளான் தெரு | 442-101-2044 |
| 18 | 3 | வாத்திமனை 8வது தெரு | 442-103-3758 |
| 19 | 3 | வாத்திமனை 10வது தெரு | 442-103-3534 |
| 20 | 4 | கருமாரியம்மன் கோயில் 2வது தெரு | 442-106-1117 |
| 21 | 7 | கோவிந்தாபுரம் எம்.சி.ரோடு | 442-104-1898 |
| 22 | 7 | கங்காபுரம் எம்.சி.ரோடு | 442-104-1935 |
| 23 | 7 | கங்காபுரம் மெயின்தெரு | 442-104-1473 |
| 24 | 13 | முத்தாலம்மன் கோவில் தெரு | 442-108-2571 |
| 25 | 13 | கஸ்பா 'பி' மெயின் ரோடு ( நகராட்சி பள்ளி முதல் ஸ்டோர் தெரு வரை) | 442-108-2664 |
| 26 | 14 | ஈஸ்வர தெரு | 442-101-1586 |
| 27 | 14 | இராமர்கோவில் தெரு | 442-101-1776 |
| 28 | 15 | ஜலீல்நகர் | 442-101-1092 |
| 29 | 21 | டெலிபோன் கோர்ட்டர்ஸ் | 442-108-2639 |
| 30 | 21 | பர்ணக்கார 5வது தெரு | 442-108-3760 |

| வ. எண் | வார்டு எண் | <u>தெருவின் பெயர்</u> | <u>துணை மின் நிலையம்</u> |
|---|---|---|---|
| 1 | 8 | பன்னீர் செல்வம் நகர் 4வது தெரு | 443-104-1380 |
| 2 | 9 | கே.எம். நகர் 1வது தெரு | 442-104-1269 |
| 3 | 9 | கே.எம். நகர் 2வது தெரு | 442-104-1280 |
| 4 | 9 | கே.எம். நகர் 2வது தெரு | 442-104-1553 |
| 5 | 9 | கே.எம். நகர் 2வது தெரு | 442-104-1429 |
| 6 | 9 | கே.எம். நகர் 2வது தெரு | 442-104-1464 |
| 7 | 9 | கே.எம். நகர் 4வது தெரு | 442-104-1222 |
| 8 | 9 | கே.எம். நகர் 5வது தெரு | 442-104-1428 |
| 9 | 9 | அனீஸ் நகர் | 442-104-1399 |
| 10 | 9 | ஆயிஷாபிநகர் சர்ச் | 442-104-164 |
| 11 | 28 | கம்பிக்கொல்லை மெயின்ரோடு | 442-101-3554 |
| 12 | 28 | கம்பிக்கொல்லை மெயின்ரோடு | 442-101-3461 |
| 13 | 28 | சுாணிகணவாய்மேடு | 442-101-2784 |
| 14 | 29 | ஜலால்கார்டன் | 442-101-3174 |
| 15 | 29 | மாங்காய்தோப்பு காணாறு | 442-101-3077 |
| 16 | 29 | அனீப்நகர் 3வது தெரு | 442-101-2782 |
| 17 | 29 | பாஷாநகர் 1வது தெரு | 442-101-3055 |
| 18 | 29 | ரெட்டிதோப்பு 2வது தெரு | 442-101-2871 |
| 19 | 29 | ரெட்டிதோப்பு 3வது தெரு | 442-101-2680 |
| 20 | 29 | தையூப்நகர் | 442-101-2796 |
| 21 | 30 | ராஜீவ்காந்தி தெரு | 442-101-3009 |
| 22 | 30 | ராஜீவ்காந்தி தெரு | 442-101-2869 |
| 23 | 30 | பெத்லகேம் 3வது தெரு | 442-101-3136 |
| 24 | 30 | பெத்லகேம் 3வது தெரு | 442-101-2789 |

| | | | |
|---|---|---|---|
| 25 | 30 | பெத்லகேம் 4வது தெரு | 442-101-2773 |
| 26 | 30 | பெத்லகேம் 5வது தெரு | 442-101-2870 |
| 27 | 30 | பெத்லகேம் 5வது தெரு | 442-101-3226 |
| 28 | 30 | பெத்லகேம் 6வது தெரு | 442-101-2792 |
| 29 | 30 | பெத்லகேம் 6வது தெரு | 442-101-3119 |
| 30 | 30 | பெத்லகேம் 7வது தெரு | 442-101-3258 |
| 31 | 30 | பெத்லகேம் 7வது தெரு | 442-101-2880 |
| 32 | 30 | பெத்லகேம் 7வது தெரு | 442-101-3264 |
| 33 | 31 | குட்டகரை | 442-101-3253 |
| 34 | 31 | குட்டகரை இந்திரா தெரு | 442-101-3101 |
| 35 | 31 | எம்.வி.சாமி நகர் | 442-101-2872 |
| 36 | 31 | பெத்லகேம் 8வது தெரு | 442-101-3100 |
| 37 | 31 | பெத்லகேம் 9வது தெரு | 442-101-3491 |
| 38 | 31 | பெத்லகேம் 10வது தெரு | 442-101-2697 |
| 39 | 31 | பெத்லகேம் 7வது தெரு | 442-101-2853 |
| 40 | 28 | சாணிகாணாமேடு விநாயகர்கோவில் தெரு | 442-101-2784 |

| வ. எண் | வார்டு எண் | <u>தெருவின் பெயர்</u> | <u>கிராமிய மின் பிரிவு</u> |
|---|---|---|---|
| 1 | 33 | எஸ்.கே.ரோடு | 442-006-1571 |
| 2 | 33 | பெரியார் 1வது தெரு | 442-006-1837 |
| 3 | 33 | பிரேம் 1வது தெரு | 442-006-1921 |
| 4 | 33 | பெரியார் 2வது தெரு | 442-006-1971 |
| 5 | 33 | நடேசன் தெரு | 442-006-1750 |
| 6 | 33 | எஸ்.வி.கோவில் பின்புறம் | 442-124-573 |
| 7 | 33 | புது தெரு | 442-006-1285 |
| 8 | 33 | புது தெரு | 442-006-1751 |

அலுவலகக்குறிப்பு: அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண். 771/2019/இ2
தீர்மான எண்.99:- அங்கீகரிக்கப்பட்டது.

ஓம்/-த.சௌந்தரராஜன்
தனி அலுவலர்
ஆம்பூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி